**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 12/2020**

**Prosecution Witness 1 (LW 1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. முருகன் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | சின்னையாதேவர் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2024.

( எதிரிகள் ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை:

நான் தேனி அல்லிநகரம் கம்போஸ்ட் ஓடை தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் முறுக்கு வியாபாரம் செய்து வருகிறேன். 04.03.2019 ம் தேதி காலை அல்லிநகரத்தில் இருந்து குலதெய்வம் கோவிலுக்கு செல்வதற்காக உசிலம்பட்டிக்கு அருகில் உள்ள நல்லுதேவன்பட்டியில் உள்ள எங்கள் குலதெய்வ கோவிலுக்காக அல்லிநகரத்தில் இருந்து காலை 06.00 மணிக்கு கிளம்பினோம்.

2. நான் ராமு என்பவர் ஓட்டிய ஆட்டோவில் நான் என்னுடைய மனைவி பொன்னுதாய், மகள் சுதாலட்சுமி, மருமகன் சென்றாயன், எனது பேரன் லோகுமணி, பேத்தி அபிநயா ஆகிய 6 பேர்கள் ஒரு ஆட்டோவில் சென்றோம். சர்தார் என்பவர் ஓட்டிய ஆட்டோவில் என்னுடைய மகன் சுரேஷ், மருமகள் பாண்டியம்மாள், பேத்தி திவ்யா அவர்கள் ஒரு ஆட்டோவில் சென்றோம்.

3. க.விலக்கு அருகில் உள்ள பிராதுகாரம்பட்டியில் உள்ள டீ கடையில் சுமார் 06.45 மணியளவில் இரண்டு ஆட்டோக்களில் வந்தவர்களும் டீ சாப்பிட்டோம். பின்னர் ராமு ஓட்டி வந்த ஆட்டோவில் இருந்து நான் இறங்கிகொண்டேன். அதன் வந்த மற்றவர்கள் முன்னே சென்றார்கள். பின்னால் வந்த சர்தார்

ஆட்டோவில் நான் ஏறிக்கொண்டேன். ஆண்டிப்பட்டியை தாண்டி கொண்டமாநாயக்கன்பட்டியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியை தாண்டி ராமு ஓட்டி சென்ற ஆட்டோ முன்னால் சென்றது.

4. அதன் பின்னால் சுமார் 20 மீட்டர் இடைவெளியில் நாங்கள் சர்தார் ஆட்டோவில் சென்று கொண்டு இருந்தோம். எதிர் திசையில் கிழக்கில் இருந்து மேற்காக அரசு பேருந்து வந்தது. ராமு ஓட்டி சென்ற ஆட்டோவும், அரசு பேருந்தும் நேருக்கு நேர் மோதிக்கொண்டது. அப்போது ஆட்டோ கவிழ்ந்து விட்டது. ஆட்டோ நொறுங்கி விட்டது. எனது மனைவிக்கு கடுமையான காயங்கள் ஏற்பட்டது.

5. எனது மருமகன் சென்றாயன், எனது மகள் சுதாலட்சுமி, எனது பேரன் லோகுமணி, எனது பேத்தி அபிநயா ஆகிய நான்கு நபர்களும் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார்கள். என்னுடைய மனைவி பொன்னுத்தாய் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார். நாங்கள் ஆண்டிப்பட்டி காவல் நிலையம் சென்றோம். நான் பதற்றத்தில் இருந்ததால் உறவினர் நாகராஜ் என்பவர் நான் சொல்ல சொல்ல புகாரை எழுதினார்.

6. பின்னர் அதனை எனக்கு படித்து காட்டினார்கள். நான் சொல்வது போல் எழுதப்பட்டிருந்தது. அந்த புகார் அதசாஆ 1 ஆகும். அன்றைய தினமே போலீசார் என்னை விசாரித்தார்கள். இறந்தவர்களை பிரேத பரிசோதனைக்காக க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆட்டோவை ஓட்டிச்சென்ற டிரைவர் ராமு என்பவர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். அவர் குட்டையாக பச்சைக்கலர் சட்டை போட்டு உள்ளார். அவரை அடையாளம் காட்டினார்.

7. அரசு பேருந்தை ஓட்டி வந்த டிரைவர் கருப்பசாமி என்பவர் என பின்னால் தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி: இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.03.2024 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN Digitally signed by S GOPINATHAN Date: 2024.03.06 18:19:35 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
06.03.2024.